Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.2/2023

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வெளியப்பன் | Occupation | |
| Father's name | வெளியப்பன் | Calling | |
| Village | வாழவந்தாள்புரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வாழவந்தாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டிலிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வன்னியம்பட்டி அருகே ஒரு கோவிலில் காது குத்து விழாவிற்காக வந்தோம். பின்னர் எங்கள் ஊருக்கு செல்வதற்காக சிவகாசி ரோட்டில் செந்தூர்பாண்டி என்பவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எங்கள் ஊருக்கு திரும்புவதற்காக செந்தூர்பாண்டி இன்டிகேட்டர் போட்டு திரும்பியபோது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் ஒன்று மோதியதில் நாங்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு வலது காலிலும் தலையிலும் காயம் ஏற்பட்டது. என்னை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு நான் ஊசி மட்டும் போட்டுக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். என்னுடன் இருசக்கர வாகனத்தில் வந்த செந்தூர்பாண்டியன் என்பவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிவந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் குடியிருப்பது மற்றும் தொழில் செய்வது வாழவந்தாள்புரம் என்றால் சரிதான். வாழவந்தாள்புரமானது ராஜபாளையத்திலிருந்து தெற்கில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி விழா நடந்ததாக கூறப்படும் இடமானது வன்னியம்பட்டி என்றால் சரிதான். வன்னியம்பட்டியிலிருந்து வாழவந்தாள்புரத்திற்கு செல்வதற்கு ராஜபாளையம் வழியாக செல்லலாம் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்துபோன நபர் எனது மச்சான் முறை ஆவார். நாங்கள் மேற்படி விழாவிலிருந்து வந்து வன்னியம்பட்டி காவல்நிலையத்தை தாண்டி தெற்கு பக்கம் திரும்பினோம். அப்போது தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபோது மணி மாலை 04.30 இருக்கும். நான் எல்லாம் விசாரித்துவிட்டு தான் மருத்துவமனை சென்றேன். சம்பவமானது மதியம் சுமார் 01.00 மணியளவில் நடந்தது. நான் சம்பவம் நடந்தவுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான் நான் காவல்நிலையத்தில் இருந்தேன். மேற்படி நான் கூறியவாறு எனக்கு காயம் ஏற்பட்டிருந்தால் காவல்நிலையத்திலிருந்தே என்னை மருத்துவமனைக்கு அனுப்பியிருப்பார்கள் என்றாலும் உண்மையில் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் இவ்வழக்கில் இறந்த நபருக்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்த நபருக்கு சுமார் 60 வயது இருக்கும். மேற்படி இறந்த நபருக்கு இவ்வழக்கு சம்பவம் நடப்பதற்கு 1 மாதத்திற்கு முன் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அவருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது என்றாலும் நான் எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மச்சுனன் முறையுள்ள நபர் செய்த இருதய அறுவை சிகிச்சையை தெரியாது என்று கூறுவது நம்பதகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. நான் கிழக்கு பார்த்து இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்ததால் பின்னால் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவமானது ரோட்டின் நடுவே நடைபெற்றது என்றால் சரிதான். நாங்கள் திருவில்லிபுத்தூரிலிருந்து சிவகாசி ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது ரோட்டின் நடுவே வரவேண்டிய

அவசயிமில்லை என்றால் நாங்கள் ஒரு விலக்கில் எங்கள் ஊருக்கு செல்வதற்காக திரும்பினோம்.

இவ்வழக்கில் இறந்த நபரும் வாழவந்தாள்புரத்தை சேர்ந்தவர் தான் அவரது குடும்பமும் அங்கு தான் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்த நபர் சாலைவிதிகளை மீறி விபத்திற்கு காரணமாக இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி இறந்த நபருடன் இருசக்கர வாகனத்தில் நான் வரவில்லை என்றாலும் இழப்பீடு வேண்டி தாக்கல் செய்த வழக்கிற்காக பின்னிட்டு பொய்யான மேற்படி புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றாலும் அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்பதுபற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை சம்பவத்தன்றே மதியம் 01.30 மணியளவில் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தனர்.

ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் இவ்வழக்கில் இறந்துபோன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் இறந்துபோன நபருடன் நானும் சென்றிருந்தால் மேற்படி இடங்களை சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும் நான் செல்லாததால் தான் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்தபோது என்னை தவிர வேறு நபர்கள் யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.2/2023

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.ஆதிசக்திராஜ்** | Occupation | ஆசிரியர் தனியார் பள்ளி |
| Father's name | ரத்தினம் | Calling | |
| Village | மேலகுன்னக்குடி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேலகுன்னக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். கடந்த 07.08.2022 அன்று எங்களுக்கு தெரிந்த நபர் ஒருவரின் விழாவிற்காக கம்மாபட்டி வந்துவிட்டு எங்கள் ஊருக்கு திரும்ப சென்றுகொண்டிருந்தபோது திருவில்லிபுத்தூர் டு சிவகாசி பிரதான சாலையில் மாயத்தேவன்பட்டி அருகே திரும்புவதற்காக உள்ள வளைவில் நானும் செந்தூர் என்பவரும் நின்றுகொண்டிருந்தபோது எனது மாமா முறையான செந்தூர்பாண்டியனும் வெளியப்பன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு வந்துகொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் Appache இருசக்கர வாகனத்தில் வந்த 2 சிறுவர்கள் வேகமாக வந்து மேற்படி செந்தூர்பாண்டியனின் இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார்கள். அதில் வெளியப்பனுக்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டது. செந்தூர்பாண்டியன் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். பின்னர் வெளியப்பனை மல்லி காவல்நிலையம் அழைத்து

சென்றேன். அவர் புகார் கொடுத்தார். ஆஜர்எதிரிதான் சம்பவயிடத்தில் இருந்தாரா என்று சரியாக நியாபகமில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் வாழவந்தாள்புரம் அருகேயுள்ள மேலகுன்னக்குடியில் குடியிருந்து வருகிறேன். நானும் அசா.1 மற்றும் இவ்வழக்கில் இறந்த நபர் ஆகியோர் ஒரே ஊர் மற்றும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி விழா நடந்ததாக கூறப்படும் இடமானது மல்லிக்கு வடக்கே அமைந்துள்ளது என்றால் சரிதான். மல்லியிலிருந்து சிவகாசி சாலையில் சென்று மாயத்தேவன்பட்டி விலக்கிலிருந்து தெற்காக சென்றால் எங்கள் ஊருக்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் எனது Passion pro இருசக்கர வாகனத்தில் மேற்படி விழாவிற்கு வந்தேன். மாயத்தேவன்பட்டி விலக்கிலிருந்து சுமார் 100 அடி தொலைவில் பெட்ரோல் பல்க் மற்றும் டீக்கடைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். மாயத்தேவன்பட்டி விலக்கில் பேருந்து நிறுத்தம் இல்லை என்றால் சரிதான். மேற்படி மாயத்தேவன்பட்டி விலக்கில் அடர்ந்த மரங்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மாயத்தேவன்பட்டி விலக்கில் மரம் மற்றும் பேருந்து நிறுத்தம் இல்லை என்பதால் அந்த இடத்தில் நான் நின்றிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி செந்தூர்பாண்டியன் மற்றும் வெளியப்பன் ஆகியோர் வருவதற்கு சுமார் 15 நிமிடங்களுக்கு முன்பு நாங்கள் அங்கு சென்றுவிட்டோம். நாங்கள் மாயத்தேவன்பட்டி விலக்கில் தெற்கு பக்கம் நின்றுகொண்டிருந்தோம். மேற்படி செந்தூர்பாண்டியன் திருவில்லிபுத்தூர் டு சிவகாசி ரோட்டில் வந்து மாயத்தேவன்பட்டி விலக்கில் திரும்பினார் என்றால் சரிதான் அப்போதுதான் விபத்து ஏற்பட்டது. விபத்தானது சாலையின் நடுவில் ஏற்பட்டது என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து மல்லி காவல்நிலையம் 1 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்திலிருந்து 2 மணி நேரம் கழித்து மல்லி காவல்நிலையம் சென்றேன். புகார் கொடுத்த அசா.1ம் என்னுடன் தான் வந்தார் என்றால் சரிதான். காவல்நிலையம் சென்ற பின்பு தான்புகார்கொடுத்தோம் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று தற்போது எனக்கு நியாபகமில்லை. என்னுடன் காவல்நிலையத்திற்குள் அசா.1 வெளியப்பன் மற்றும் செந்தூர் ஆகியோர்கள் வந்தனர். மேலும் 3 நபர்கள் வந்தார்கள்.

அதை தவிர எங்கள் ஊரை சேர்ந்தமேற்படி விழாவிற்கு வந்திருந்த சுமார் 30 நபர்கள் காவல்நிலையத்திற்கு வந்திருந்தார்கள். அசா.1 ஐ நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். அப்போது மருத்துவர் எனது பெயரையும் கேட்டு எழுதினாரா என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. சம்பவம் நடந்த தேதியை மட்டும் சரியாக கூறிவிட்டு மற்ற சங்கதிகள் தெரியாது என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் இறந்த நபர் எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 க்கு காயம் ஏற்பட்டிருந்தால் அவரை உடனே மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பேன் என்றாலும் அவ்வாறு காயம் ஏற்படாததால் தான் அவரை உடனே மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. இறந்த நபருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பின்னிட்டு அசா.1 மூலம் உற்பத்தி செய்யப்பட்ட புகார் ஒன்றை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னை போலீசார் புகார் கொடுத்த அன்று காவல்நிலையத்தில் வைத்தும் அதன் பின்னர் மற்றொரு நாள் காவல்நிலையம் வரசொல்லியும் விசாரித்தார்கள். மேற்படி அசா.1 கொடுத்த புகார் மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேன். அதுதவிர வேறு எத்தனை கையெழுத்துக்கள் என்னிடம் பெற்றார்கள் என்பது பற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. நான் ஆசிரியர் என்பதால் சமயோஜிதமாக பதிலளிக்கிறேன் என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.2/2023

**Depositions of PW- 3**

| Name | **திரு.செந்தூர்** | Occupation | கூலி வேலை |
|---|---|---|---|
| Father's name | முத்தையா | Calling | |
| Village | வாழவந்தாள்புரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாழவந்தாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும். அசா.2 ஐ எனக்கு தெரியாது. பைக்கில் வந்த 2 நபர்களை எனக்கு தெரியும் ஆனால் அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. கடந்த 07.08.2022 அன்று எங்கள் ஊரை சேர்ந்த நபர்கள் விகே.முத்துச்சாமி என்பவரின் பேரன் காது குத்திற்காக வாழவந்தாள்புரத்திலிருந்து ஒரு கோவிலுக்கு வந்தோம். பின்னர் மல்லியிலிருந்து எங்கள் ஊருக்கு நானும் மற்றொரு நபரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்களுக்கு பின்னால் அசா.1 ம் செந்தூர்பாண்டியன் மற்றும் வெளியப்பனும் வந்தார்கள். அப்போது மாயத்தேவன்பட்டி விலக்கு அருகே திரும்பியபோது வலது பக்க இன்டிகேட்டர் போட்டு திரும்பினார்கள் அப்போது அதே ரோட்டில் மேற்கிலிருந்து இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் அவர் மீது மோதிவிட்டார்கள். இவ்வழக்கில் இறந்த நபருக்கு மூக்கிலிருந்து ரத்தம் வந்தது அசா.1 க்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டது. நாங்கள் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து அவர்கள் வந்து பார்த்துவிட்டு செந்தூர்பாண்டியன் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். பின்னர் நாங்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் செந்தூர்பாண்டியனை திருவில்லிபுத்தூர்

அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னர்மல்லி காவல்நிலையம் சென்று அசா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி இறந்த நபரும் அசா.1ம் வருவதற்கு முன்பே நாங்கள் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நாங்கள் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து 15 நிமிடங்களில் ஆம்புலன்ஸ் வந்தது என்றால் சரிதான். மற்றொரு தனியார் ஆம்புலன்ஸானது தகவல் தெரிவித்து 15 நிமிடங்களில் வந்தது என்றால் சரிதான். மேற்படி நபர் இறந்துவிட்டதாக 108 ஆம்புலன்ஸில் வந்தவர்கள் கூறியவுடன் தனியார் ஆம்புலன்ஸை வரவழைக்க போன் செய்தோம் என்றால் சரிதான். தனியார் ஆம்புலன்ஸ் வந்தவுடன் இறந்த நபரை ஏற்றிவிட்டு நாங்கள் மல்லி காவல்நிலையம் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். மல்லி காவல்நிலையத்திற்கு நானும் அசா.1 மற்றும் ஆதி என்ற நபரும் சென்றோம். நாங்கள் காவல்நிலையம் சென்றபோதும் அசா.1க்கு காயம் இருந்தது என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து உடனே மருத்துவமனை செல்லுமாறு கூறினார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனை சென்றோம். பின்னர் மீண்டும் காவல்நிலையம் சென்றோம் அப்போது போலீசார் என்னை விசாரித்தனர். புகார் மனுவை போலீசார் சொல்ல சொல்ல ஆதி என்ற நபர் எழுதினார். என்னை போலீசார் மதியம் சுமார் 01.30 மணியளவில் விசாரித்தார்கள் எங்களிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அசா.1 கொடுத்த புகாரில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நானும் மற்றொரு நபரும் சம்பவம் நடப்பதற்கு முன்பே கிளம்பிவிட்டதாக கூறியுள்ள நிலையில் நாங்கள் சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நாங்களும் இவ்வழக்கின் இறந்த நபரும் ஓட்டிவந்த வாகனங்கள் சென்றுகொண்டிருந்தபோதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. ஆஜர் எதிரி மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்தை ஓட்டிவந்த நபர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. நான் சம்பவம் நடந்த சமயத்திலோ அல்லது அதற்கு முன்போ சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் இவ்வழக்கில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திலிருந்து நாங்கள் கொஞ்சம் தள்ளி நின்றோம்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.